
# பஞ்சபுராண திரட்டு



உ

# பஞ்சபுராண திரட்டு



**தொகுப்பாசிரியர்**

**ம.ஜெகநாதன் (ஜெக்கி)**

# நூல் விபரம்


நூலின் பெயர்: பஞ்சபுராண திரட்டு

தொகுப்பு:<br>
நூல் வடிவமைப்பு:<br>
அட்டை வடிவமைப்பு: ] ம.ஜெகநாதன்

கணனி தட்டச்சு:<br>
ஒப்பு நோக்கல்: ] திருமதி.தர்மராணி ஜெகநாதன்

அச்சுப்பதிவு: பிறிண்டேர்ஸ்<br>
பதிப்பு: ஜூன் 2020<br>
பக்கங்கள்: 06+42


**ஆசிரியரின் ஏனைய நூல்கள்** (இலவச வெளியீடு)

1. வைரவர் பக்தி மாலை – டிசெம்பர் 2018
2. நவராத்திரி பாமாலை – மே 2019
3. சிவதோத்திரத் திரட்டு – செப்டம்பர் 2019



# ஆசியுரை

## வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய
## பிரதம குருவின் ஆசிச்செய்தி

உ
சிவமயம்

“நாம சங்கீர்த்தனம்” அதாவது இறைவனது திருநாமங்களை பாடிப் பரவுவதே இக்காலத்தில் நாம் செய்யவேண்டிய வழிபாடாகும்.

“நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க” என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

“நற்றவா உனை நான் மறக்கினுஞ் சொல்லும் நா நமச்சிவாயவே”

நின்றும் இருந்தும் கிடந்தும் நாம் நினைக்க வேண்டியது நமச்சிவாய மந்திரமே. நாயன்மார்கள், அருளாளர்கள் பாடிய அனைத்து திருப்பாடல் களினதும் சாரமாக நமச்சிவாய மந்திரமே திகழ்கிறது.

அன்பர் ம.ஜெகநாதன் அவர்கள் “பஞ்சபுராண திரட்டு” எனும் நான்காவது தொகுப்பை வெளியிடுகின்றார். தேடற்கரிய கிடைத்தற்கரிய திருப்பாடல் களை தொகுத்து அழகிய மலராக உங்கள் கைகளில் தவழும் இந்நூல் நன்கு பக்தி மணம் பரப்ப எல்லாம் வல்ல ஞானவைரவ சுவாமி அருள் பாலிக்க பிரார்த்திப்பதோடு, நல்லாசிகளும் கூறி மகிழ்வடைகிறேன்.

சுபம்!

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

இங்கனம்
பிரம்மஶ்ரீ. இராம.இராமலிங்கசர்மா



# என்னுரை

மனிதவாழ்வை வழிப்படுத்துவது சமயம். வழிபாடு மனிதனின் எண்ணங் களில் சிறப்பை சேர்க்கும் வல்லமை கொண்டது. இவ் எண்ணம் இறைவழி நின்று ஏற்படுத்தப்பட வேண்டும். மனிதர்களின் வெற்றி அவரவர் இறைவன் மேல் வைத்திருக்கும் பக்தி, தியாகம் மற்றும் ஆன்மீகச் சேவையில் தங்கி யிருக்கிறது. தன் மனதை அன்பு செலுத்துவதற்கும், உடலை கடமை செய் வதற்கும் பயன்படுத்துவதே மனித தத்துவம்.

வழிபாட்டிற்கு வலிமையும், வளமும் சேர்க்கும் வகையில் திருமுறைகளும், அருட்பாக்களும் அமைகிறது. திருமுறைப் பாக்களின் அருமை பெருமை அளவிடற் கரியது என்பதை நாம் உணரவேண்டும். அத்தகைய பாடல்களைப் பாடி இறைவனைத் துதிப்பதுவும் அர்ச்சனை வழிபாடே.

பஞ்சபுராணத்தில் உள்வாங்கப்பட்ட திருமுறைகளை தலைப்பாகக் கொண்டு, தேர்ந்தெடுத்த பாடல்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. அன்றியும், மாணவர் களுக்கு பயன்படும் வகையில் பஞ்சதோத்திர படிமுறையில் இலகுபடுத்தி தரப்பட்டுள்ளது.

திருத்தலங்கள், பாடசாலைகள், வீடுகள், சமய நிகழ்வுகளில் பஞ்சபுராணம் ஓதுவதற்கும், கூட்டுப்பிரார்த்தனை, பஜனை நடாத்துவதற்கும் இந்நூல் ஓரளவு பயனுடையதாக அமையும். தேவைக்கேற்ப திருமுறைகள் பற்றிய விரிவான விளக்கங்களும், பஞ்சதோத்திரம் பற்றிய குறிப்பும் முன்னிணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளது.

சிறார்களுக்கு ஏற்படுகின்ற பஞ்சபுராணம் பற்றிய நேர்மறை எண்ணங்களை மேம்படுத்துவதோடு, வழிகாட்டுகின்ற கைநூலாகவும் இந்நூல் அமையும்.

என் பணியை சிரமமின்றி நிறைவுசெய்ய பாடல் தெரிவுகள், கணனி தட்டச்சு, ஒப்பு நோக்கல் பணிகளில் என்னுடன் துணை நின்ற எனது மனைவி திருமதி. தர்மராணி அவர்களுக்கு எனது அன்பு நன்றிகள்.

நிதிப்பங்களிப்பில் இந்நூல் இலவச வெளியீடாக வெளிவருகிறது. எனது உள்ளார்ந்த நன்றியும், வாழ்த்துக்களும்.

ஆசிஉரை வழங்கிய வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ இரா.இராமலிங்கசர்மா அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

இந்நூல் பிரார்த்தனை செய்பவர்களுக்கும், பாராயணம் செய்பவர்களுக்கும் பயனுள்ளதாகவும், ஊக்கம் தரக்கூடியதாகவும் இருக்கும் என நம்புகிறேன்.

# முன்னுரை

மனச்சாட்சி எனப்படும் அந்தராத்மாவின் குரலுக்கு செவிசாய்த்து, அதன் வழியில் உண்மையாக நடப்பதே வழிபாடாகும். “இறைவன் வழியைப் பின் பற்றுதல்” என்றும் வழிபாட்டிற்கு பொருள் கொள்ளலாம். வழிபாடு நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியதாகும்.

கடவுளை நான்கு நிலைகளில் வழிபடலாம்.

**அன்பாக வழிபடுவது:** கடவுளை உறவாக பாவித்து வரம் கேட்பது. பெற்ற தாயாக, தந்தையாக பாவித்து வழிபாடு செய்தல்.

**ஆகம முறையில் வழிபடுதல்:** மந்திரங்கள் ஜெபிப்பது, மலர்கள் சமர்ப்பித்து வழிபடுதல்.

**பயன் கருதி பூஜித்தல்:** முடி காணிக்கை, காவடி, பால்குடம் எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன் செலுத்தி, இறைவனிடம் கேட்கும் வழிபாடு.

**பயன் கருதாமல் பூஜித்தல்:** எந்த பிரதிபலனும் எதிர்பாராமல், ஆன்ம நெறியில் செய்யும் இந்த வழிபாடு, ‘ஞான வழிபாடு’ ஆகும்.

இந்த நான்கில் எதைத் தேர்ந்தெடுத்து வழிபட்டாலும், கருணைக் கடலான கடவுள் அருள்பாலிப்பார்.


கோயில்கள், இல்லங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுப்பணி மன்றங் களின் பூசை ஆராதனைகளிலும், பிரார்த்தனைகளிலும் திருமுறைகளை மெய்யன்போடு பாராயணம் பண்ணிவர, எமக்கு நேரிட்ட கொடுவினை யும் அவற்றால் ஏற்படும் துன்பங்கள், துயரங்கள், அழிவுகள், அனர்த்தங் கள் அனைத்தும் நீங்கிவிடும் என்பது உறுதி.

இவற்றை மனம், மொழி, மெய்த்தூய்மையுடன் உணர்ந்து, மெய்யன் போடு ஓதி வருபவர்களின் இவ்வுலக வாழ்க்கை, நன்னெறியில் அமைவதோடு அமைதியும் இன்பமும், சீரும் சிறப்பும் பெற்றுத் திகழும் என்பது முடிந்த முடிவு ஆகும்.

தேவாரம் முதலிய திருமுறைப் பாடல்களைப் பாடும்போது, பண்ணோடு இசைக்க வேண்டியது இன்றியமையாதது.

# உள்ளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் … … … … | 01 |
| 2. | வைரவர் துதி … … … … … | 01 |
| 3. | பன்னிரு திருமுறைகள் … … … | 02 |
| 4. | பஞ்சபுராணம் … … … … … | 07 |
| 5. | தேவாரம் - முதலாம் திருமுறை … | 08 |
| 6. | தேவாரம் - இரண்டாம் திருமுறை … | 10 |
| 7. | தேவாரம் - மூன்றாம் திருமுறை … | 12 |
| 8. | தேவாரம் - நான்காம் திருமுறை … | 14 |
| 9. | தேவாரம் - ஐந்தாம் திருமுறை … | 16 |
| 10. | தேவாரம் - ஆறாம் திருமுறை … … | 18 |
| 11. | தேவாரம் - ஏழாம் திருமுறை … … | 21 |
| 12. | திருவாசகம் … … … … … | 24 |
| 13. | திருவிசைப்பா … … … … … | 27 |
| 14. | திருப்பல்லாண்டு … … … … … | 30 |
| 15. | பெரியபுராணம் … … … … … | 33 |
| 16. | திருப்புகழ் … … … … … | 38 |
| 17. | வாழ்த்து … … … … … | 42 |

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே!

- திருவதிகை வீரட்டானம்

திருச்சிற்றம்பலம்

# வைரவர் துதி

திருச்சிற்றம்பலம்

விரித்த பல்கதிர்கொள் சூலம்
வெடிபடு தமருகம்கை
தரித்ததோர் கோலகால வைரவனாகி
வேழம் உரித்து உமை அஞ்சக் கண்டு
ஒண்திருமேனி வாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே.

- திருச்சேறைத் தலம்

திருச்சிற்றம்பலம்

# பன்னிரு திருமுறைகள்

சைவத் திருமுறைகள் என்பவை பல்லவர் காலத்திலும் அதன் பின்னரும் தோன்றிய சைவ சமய நூல்களின் தொகுப்பாகும். இவை திருமுறைகள் என்றும் அறியப்படுகின்றன. இவை மொத்தம் 12 திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. சைவ மரபில் தெய்வத்தன்மை வாய்ந்த அருள் நூல்கள் என திருமுறைகள் போற்றப்படுகிறது. சிவபெருமானை மூல முதல்வனாகக் கொண்டு செந்தமிழில் பாடப்பெற்ற பக்திப் பாடல்களின் தொகுப்பே திருமுறைகளாகும்.

இராஜராஜசோழன் தேவாரத் திருப்பதிகங்களைத் தேடி, அவை தில்லை நடராஜப் பெருமான் ஆலய அறை ஒன்றில் அடைந்துகிடந்து, கறையா னுக்கு இரையாகி வரும் செய்தி அறிந்து, அவற்றை மீட்டு எடுத்தார் என்பது வரலாறு. இப்படி கிடைக்கப் பெற்றவைதான் திருமுறைகள் என அறியப்படுகின்றன.

திருமுறைகளிலுள்ள மொத்தப் பாடல்கள் 18200. பன்னிரண்டு திருமுறை களையும் பாடியோர் மொத்தம் 27 அருளாளர்கள்.

சம்பந்தர் பாடிய தேவாரங்களை மூன்றாகப் பிரித்து, முதலாவது, இரண்டா வது, மூன்றாவது திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடிய தேவாரங் களை மூன்றாக வகுத்து நான்காவது, ஐந்தாவது, ஆறாவது திருமுறை களாகவும், சுந்தரர் அருளிய தேவாரங்களை ஏழாவது திருமுறை யாவும் வகுத்தனர்.

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை என்று அழைக்கப்படுகிறது.

ஒன்பது அடியார்களால் உருவாக்கப்பட்ட பாடல்கள் ஒன்பதாம் திருமுறை யாகும். இத்திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என இரண்டு வகையாகப் பார்க்கப்படுகின்றன. சேந்தனார் மட்டும் திருப்பல்லாண்டு, திருவிசைப்பா இரண்டையும் பாடியுள்ளார். ஏனையோர் திருவிசைப் பாவினை மட்டும் பாடியுள்ளனர்.

3000 பாக்களைக் கொண்ட திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறை யாகும். இந்துசமயத் தத்துவங்களை விளக்குகின்ற பழைய தமிழ் நூல் இதுவாகும். ஒன்பது உட்பிரிவுகளையும், 232 அதிகாரங்களையும் கொண்

டது. உட்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தந்திரம் என்பது பெயர்.

காரைக்கால் அம்மையார், நக்கீரர், நம்பியாண்டார் நம்பி, பட்டினத்தார், சேரமான் பெருமாள் நாயனார் உட்பட பன்னிரு அருளாளர்கள் அருளிய பாடல்களின் தொகுப்பு பதினோராம் திருமுறை. இதில் நாற்பது பதிகங்கள் அடங்கியுள்ளன. சைவப் பிரபந்த மாலை அல்லது சைவப் பிரபந்த திரட்டு எனவும் அழைக்கப்படுகின்றது.

சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தை பன்னிரண்டாவது திருமுறை எனவும் வகுத்தனர். இரு காண்டங்களாக அமைந்த இந்தப்புராணம், 13 சருக்கங்களைக் கொண்டது.

முதல் பதினொரு திருமுறைகள் வரை 11ஆம் நூற்றாண்டில் திருநாரை யூரில் தோன்றிய நம்பியாண்டார் நம்பி என்னும் அருளாளரால் தொகுக்கப் பட்டவையாகும். பின்னர் 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் காலத்தில் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

திருமுறைகள் அனைத்தும் சிவபெருமானின் திருவாக்குகளே. அவரே அடியவர்களுக்கு உள்ளிருந்து உணர்த்தியும், முதலடி எடுத்துக் கொடுத்தும் வெளிப்படுத்திய அருள்வாக்குகள். அதனாலேயே இவை அருட்பாக்கள் எனப்படும்.

பன்னிரு திருமுறைகளில் முதல் ஒன்பது திருமுறைகள் இறைவனை வாழ்த்திக் கூறுவதால் இவை தோத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

திருமூலர் அருளிய 10ஆம் திருமுறை திருமந்திரம் தமிழ் ஆகம நூல் என்று அழைக்கப்படுகிறது.

11ஆம் திருமுறை பாடல்கள் (பொதுப் பாடல்களின் தொகுப்பு) பிரபந்தம் என்று அழைக்கப்படுகிறது.

12ஆம் திருமுறை பாடல்கள் 63 நாயன்மார்களின் வாழ்க்கையை விளக்குவதால் வரலாறு என்று அழைக்கப்படுகிறது.

எமக்கு ஊழ்வினையால் ஏற்படும் துன்பங்களில் இருந்தும், வாழ்வில் சந்திக்கும் அனைத்து துன்பங்களில் இருந்தும் மருந்தாக அமைந்து எம்மைக் காத்து அருளும் பன்னிருதிருமுறைகளால் இறைவனை ஆராதித்து வாழ்வில் நன்னிலை அடைவோம்.

# திருமுறைகளில் பாடல்களின் எண்ணிக்கை

| திருமுறை | பாடியவர்(கள்) | பாடல் |
|---|---|---|
| முதலாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | 1,469 |
| இரண்டாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | 1,331 |
| மூன்றாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | 1,358 |
| நான்காம் திருமுறை | திருநாவுக்கரசர் | 1,070 |
| ஐந்தாம் திருமுறை | திருநாவுக்கரசர் | 1,015 |
| ஆறாம் திருமுறை | திருநாவுக்கரசர் | 981 |
| ஏழாம் திருமுறை | சுந்தரமூர்த்திநாயனார் | 1,026 |
| எட்டாம் திருமுறை | மாணிக்கவாசகர் | 1,058 |
| ஒன்பதாம் திருமுறை | 9 அருளாளர்கள் | 301 |
| பத்தாம் திருமுறை | திருமூலர் | 3,000 |
| பதினொன்றாம் திருமுறை | 12 அருளாளர்கள் | 1,385 |
| பன்னிரண்டாம் திருமுறை | சேக்கிழார் | 4,286 |
| **மொத்தம்** | | **18,280** |

# சமய குரவர்கள்

| பெயர் | இயற்பெயர் | நூற்றாண்டு | வாழ்ந்த காலம் |
|---|---|---|---|
| திருநாவுக்கரசர் | மருணீக்கியார் | (580-660) 7 | 80 வரு. |
| திருஞானசம்பந்தர் | சம்பந்தன் | (640-656) 7 | 16 வரு. |
| சுந்தரமூர்த்திநாயனார் | நம்பிஆரூரர் | (700-718) 8 | 18 வரு. |
| மாணிக்கவாசகர் | வாதவூரர் | (862-894) 9 | 32 வரு. |

## தேவாரம்:

தேவாரம் என்பது சிவபெருமான் மீது பாடப்பெற்ற பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் ஆகும். தேவாரங்கள் பதிக வடிவிலே பாடப்பட்டுள்ளன. பத்து பாடல்களின் தொகுப்பு ஒரு பதிகம். 7ஆம் நூற்றாண்டில் 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் திருமுறைகள் சம்பந்தரினாலும், 4ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் திருமுறைகள் திருநாவுக்கரசரினாலும் பாடப்பட்டவையாகும். 7ஆம் திருமுறை சுந்தரமூர்த்தி நாயனாரினால் பாடப்பட்டவையாகும்.

## திருவாசகம்

பன்னிரு திருமுறைகளில் திருவாசகம் எட்டாம் திருமுறையாக உள்ளது. சிவபெருமான் மீது மாணிக்கவாசகரினால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு திருவாசகம். தான் சொல்ல தில்லைப் பெருமானே எழுதியதாகக் கூறுவர். இது 51 பகுதிகளையும் 658 பாடல்களையும் கொண்டுள்ளது. மனதை உருக்கும் தன்மை கொண்ட இப்பாடல்கள், தமிழில் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்து கணிக்கப்படுகிறது. ”திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்” என்ற கூற்றும், ”மனிதன் தெய்வத்திடம் கூறியது திருவாசகம்” என்ற கருத்தும் இதன் சிறப்பை உரைக்கும் வாசகங்களாகும்.

## திருவிசைப்பா

திருவிசைப்பா பன்னிரு திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறை. இதன் பாடல்கள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என இரண்டு வகையாகப் பார்க்கப்படுகின்றன. இது ஒன்பது அடியார்கள் பாடிய 301 பாடல்களின் தொகுப்பாகும். திருவிசைப்பா பெயர் உணர்த்துவதற்கேற்ப முழுவதும் இசைப்பாக்களால் ஆனது.

## திருப்பல்லாண்டு

சேந்தனாரால் பாடப்பட்டுள்ள திருப்பல்லாண்டும், திருவிசைப்பாவும் ஒன்பதாம் திருமுறையாகும். திருப்பல்லாண்டு 13 பாடல்களை உள்ளடக்கிய ஒரு பதிகத்தைக் கொண்டுள்ளது. பாடல்கள் யாவும் நிறைவில் ‘பல்லாண்டு கூறுதுமே’ என ஒரே மாதிரியாக அமைந்துள்ளன.

## பெரியபுராணம்

திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாக சேக்கிழார் அருளிய பெரியபுராணம் விளங்குகிறது. 63 நாயன்மார்களுடைய வாழ்க்கை வரலாறுகளை விபரிக்கும் சைவ காப்பியமாகும். இதற்கு திருத்தொண்டர் புராணம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இந்நூல் இரண்டு பெரும் பிரிவாக, முதல் காண்டத்தில் ஐந்து சருக்கங்களையும், இரண்டாம் காண்டத்தில் எட்டு சருக்கங்களையும் கொண்டு, 4286 விருத்தப் பாக்களை உள்ளடக்கி அமைக்கப்பெற்றுள்ளது. அடியார் வரலாறுகளை விரித்துரைக்கும் பாடல்களின் முதல் வரியே சருக்கங்களின் பெயராக உள்ளது. திருமுறைகளைப் போன்று பெரியபுராணமும் செய்யுள் வடிவிலேயே உள்ளது. பெரிய புராணத்தைப் பாட தில்லையில் சிவபெருமானே 'உலகெல்லாம்' என்று அடியெடுத்து கொடுத்தாக நம்பப்படுகிறது.

மாணிக்கவாசக சுவாமிகளின் வரலாறும், சிவபெருமானைத் தவிர பிற தெய்வங்களைப் போற்றும் தோத்திரங்களை பாடியவர்களின் வரலாறுகளும், சந்தான குரவர்களின் வரலாறுகளும், திருமூலரைத்தவிர பிற சித்தர்களின் வரலாறுகளும் பெரிய புராணத்தில் இடம் பெற்றிருக்கவில்லை.

## திருப்புகழ்

திருப்புகழ் என்பது முருகக் கடவுள் மீது அருணகிரிநாதர் இயற்றிய ஒரு பக்தி நூல். இதில் 1307 இசைப்பாடல்கள் உள்ளன. திருப்புகழை தேவாரம், திருவாசகம் போல் மந்திர நூலாகவும், நாள்தோறும் இறைவனைப் போற்றிப் புகழ்பாடும் நூலாகவும், முருகன் மீது பக்தி கொண்டோர் பின்பற்றும் நூலாகவும் கொள்கின்றனர்.

முருகக் கடவுளை முன்னிறுத்திப் பாடப்பட்டதுதான் என்றாலும், அதில் ஏனைய கடவுள்கள் பற்றியும் அருணகிரிநாதர் பாடியிருக்கிறார். திருப்புகழ் முருகப்பெருமானே அடியெடுத்துக் கொடுக்க, அருணகிரிநாதர் பாடியது என கருதப்படுகிறது.

# பஞ்சபுராணம்

ஆலயங்களில் அபிசேகம் மற்றும் ஆராதனைகள் நடக்கும் போது பன்னிரு திருமுறைகள் பாடப்படுவது வழக்கமாகும். சில சமயங்களில் பன்னிரு திருமுறைகளையும் அன்றாடம் ஓத இயலாத காரணத்தினால் எளிமைப் படுத்தப்பட்ட வடிவமாக ஐந்து பகுதிகளை மட்டுமே கொண்டு உருவாக்கப் பட்டதுதான் பஞ்சபுராணம்.

## பஞ்ச புராணத்தில் உள்ளடக்கப்பட்ட பகுதிகள்:

1. **தேவாரம்:-** திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது.
2. **திருவாசகம்:-** மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது.
3. **திருவிசைப்பா:-** திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது அடியார்கள் அருளியது.
4. **திருப்பல்லாண்டு:-** சேந்தனார் அருளியது.
5. **பெரியபுராணம்** (திருத்தொண்டர் புராணம்):- சேக்கிழார் அருளியது.

சிவாலயங்களில் ஆறுகால பூசைகளின் போது பஞ்சபுராணம் ஓதுதல் நிகழ்கிறது. இதற்காக தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல் லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்து பகுதிகளிலிருந்தும் ஒரு பாடல் வீதம் பாடப்படுகிறது.

சமய நிகழ்வுகளில் விநாயகர் துதியுடன் ஆரம்பிப்பது வழமை. பஞ்சபுராணம் பாடத் தொடங்கும் போதும் முடிக்கும் போதும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்ல வேண்டும். திருச்சிற்றம்பலம் என்பது அருட்பெரும் சோதி, பதி இருக்கும் இடமான சிதம்பரத்தினைக் குறிக்கும் சொல்லாகும்.

பஞ்சபுராணம் ஓதியபின் அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழ் பாடல் ஒன்று ஓதி, “வான்முகில் வழாது பெய்க” என்ற கந்தபுராண வாழ்த்து பாடி நிறைவு செய்வது வழமையில் உள்ளது.

பஞ்ச புராணம் ஓதினால் பன்னிரு திருமுறைகளை ஓதிய பயன் கிடைக்கும்.

# தேவாரம் – முதலாம் திருமுறை

(திருஞானசம்பந்தர் அருளியது)

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே. -1

-திருப்பிரமபுரம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. -2

- திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.-3

-திருவண்ணாமலை

பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே. — சீகாழி -4

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்னிலை யோர்க்கே. -5

- திருநின்றியூர்

விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற் றையுதைத் தவர்சேரும்
பதியா வதுபங் கயநின் றலரத்தேன்
பொதியார் பொழில்சூழ் புகலிந் நகர்தானே. -திருப்புகலி -6

சடையார்புன லுடையானொரு சரிகோவண முடையான்
படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிட முடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம் வீழிம்மிழ லையே. -7
-திருவீழிமிழலை

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானமெ னீரே. -8
- திருநெய்த்தானம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. -9
- திருக்கோலக்கா

விரிதரு புலியுரி விரவிய வரையினர்
திரிதரு மெயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையின ரிடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. -திருவிடைமருதூர் -10



# தேவாரம் – இரண்டாம் திருமுறை

(திருஞானசம்பந்தர் அருளியது)

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. -1
- திருவாலவாய்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. - பொது -2

விருது குன்றமா மேருவில் நாணர வாஅனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே. -3
- திருக்கேதீச்சரம்

நிலவும் புனலும் நிறைவா ளரவும்
இலகுஞ் சடையார்க் கிடமா மெழிலார்
உலவும் வயலுக் கொளியார் முத்தம்
விலகுங் கடலார் வேணு புரமே. -திருவேணுபுரம் -4

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே. -5
- திருக்கோடிகா

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர் பான்மலிந் தோங்கிய
சொல்லானைத் தொன்மதிற் காழியே கோயிலாம்
இல்லானை யேத்தநின் றார்க்குள தின்பமே. - சீகாழி -6

திகழுந் திருமா லொடுநான் முகனும்
புகழும் பெருமான் அடியார் புகல
மகிழும் பெருமான் குடவாயின் மன்னி
நிகழும் பெருங்கோ யில்நிலா யவனே. -7
- திருக்குடவாயில்

சுற்றமொடு பற்றவை துயக்கற வறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே. - திருக்கருப்பறியலூர் -8

ஏடுமலி கொன்றையர விந்துவிள வன்னி
மாடவல செஞ்சடையெ மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசியநள் ளாறே. - திருநள்ளாறு -9

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால்வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே. -10
- திருமருகல்



# தேவாரம் – மூன்றாம் திருமுறை

(திருஞானசம்பந்தர் அருளியது)

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. - பொது -1

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே. - திருக்கோணமலை -2

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. -3
- திருக்கழுமலம்

வேதியன் விண்ணவ ரேத்தநின் றான்விளங் கும்மறை
ஓதிய வொண்பொரு ளாகிநின் றானொளி யார்கிளி
கோதிய தண்பொழில் சூழ்ந்தழ கார்திருக் கோட்டாற்றுள்
ஆதியை யேநினைந் தேத்தவல் லார்க்கல்ல லில்லையே. -4
- திருக்கோட்டாறு

வண்ணமா மலர்கொடு வானவர் வழிபட
அண்ணலா ராயிழை யாளொடு மமர்விடம்
விண்ணின்மா மழைபொழிந் திழியவெள் ளருவிசேர்
திண்ணிலார் புறவணி திருமுது குன்றமே. - திருமுதுகுன்றம் -5

மந்திர மறையவை வான வரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்மிறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய
அந்தமு முதலுடை யடிக ளல்லரே. - திருவெண்காடு -6

துளமதி யுடைமறி தோன்று கையினர்
இளமதி யணிசடை யெந்தை யாரிடம்
உளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே. -7
- திருவைகல் மாடக்கோயில்

நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்குவந் தெய்து நின்மலன்
கனைகடல் வையகம் தொழுக ருக்குடி
அனலெரி யாடுமெம் அடிகள் காண்மினே. -8
- திருக்கருக்குடி

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே. - திருஆலவாய் -9

பாயுமால்விடை மேலொரு பாகனே
பாவைதன்னுரு மேலொரு பாகனே
தூயவானவர் வேதத் துவனியே
சோதிமாலெரி வேதத் துவனியே
ஆயுநன்பொருள் நுண்பொரு ளாதியே
ஆலநீழல் அரும்பொரு ளாதியே
காயவின்மதன் பட்டது கம்பமே
கண்ணுதற்பர மற்கிடங் கம்பமே. - திருவேகம்பம் -10

# தேவாரம் – நான்காம் திருமுறை

(திருநாவுக்கரசு நாயனார் அருளியது)

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. - பொது -1

ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோளுடை யானும்
ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிரம் நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானு மாரூ ரமர்ந்தவம் மானே. -2
- திருவாரூர்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். -3
- திருவையாறு

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. -4
— திருக்கச்சியேகம்பம்

ஊனினுள் ளுயிரை வாட்டி உணர்வினார்க் கெளிய ராகி
வானினுள் வான வர்க்கும் அறியலா காத வஞ்சர்
நானெனிற் றானே யென்னும் ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனுமின் னமுது மானார் திருச்செம்பொன் பள்ளி யாரே. -5
- திருச்செம்பொன்பள்ளி

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. - திருவதிகை வீரட்டானம் -6

நங்கையைப் பாகம் வைத்தார் ஞானத்தை நவில வைத்தார்
அங்கையி லனலும் வைத்தார் ஆனையி னுரிவை வைத்தார்
தங்கையின் யாழும் வைத்தார் தாமரை மலரும் வைத்தார்
கங்கையைச் சடையுள் வைத்தார் கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. -7
- திருக்கழிப்பாலை

காடுடைச் சுடலை நீற்றர் கையில் வெண்டலையர் தையல்
பாடுடைப் பூதஞ் சூழப் பரமனார் மருத வைப்பில்
தோடுடைக் கைதை யோடு சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி யிடைமரு திடங்கொண் டாரே. -8
- திருவிடைமருதூர்

காலனை வீழச் செற்ற கழலடி யிரண்டும் வந்தென்
மேலவா யிருக்கப் பெற்றேன் மேதகத் தோன்று கின்ற
கோலநெய்த் தான மென்னுங் குளிர்பொழிற் கோயின் மேய
நீலம்வைத் தனைய கண்ட நினைக்குமா நினைக்கின் றேனே. -9
- திருநெய்த்தானம்

மாயிரு ஞால மெல்லா மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே. -10
- திருவாவடுதுறை

# தேவாரம் – ஐந்தாம் திருமுறை

(திருநாவுக்கரசு நாயனார் அருளியது)

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. - பொது -1

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. - கோயில் -2

பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே. - திருவிடைமருதூர் -3

முந்தி மூவெயி லெய்த முதல்வனார்
சிந்திப் பார்வினை தீர்த்திடுஞ் செல்வனார்
அந்திக் கோன்தனக் கேயருள் செய்தவர்
பந்திச் செஞ்சடைப் பாசூ ரடிகளே. - திருப்பாசூர் -4

மலைக்கொ ளானை மயக்கிய வல்வினை
நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையுங் கொன்றிடு மாதலால்
கலைக்கை யானைகண் டீர்கட வூரரே. -5
- திருக்கடவூர்வீரட்டம்

நீல மாமணி கண்டத்தர் நீள்சடைக்
கோல மாமதி கங்கையுங் கூட்டினார்
சூல மான்மழு ஏந்திச் சுடர்முடிப்
பால்நெய் யாடுவர் பாலைத் துறையரே. -6
-திருப்பாலைத்துறை

நல்லர் நல்லதோர் நாகங்கொண் டாட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும் மருந்துகள்
பல்லில் ஓடுகை யேந்திப் பலிதிரி
செல்வர் போல்திரு நாகேச் சரவரே. -7
- திருநாகேச்சரம்

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே. -8
- திருமாற்பேறு

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே. -9
- திருமருகல்

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே. -10
- திருவான்மியூர்



# தேவாரம் – ஆறாம் திருமுறை

(திருநாவுக்கரசு நாயனார் அருளியது)

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே. -1

- பொது

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடியென் மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. -2

- திருவையாறு

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. -3

- திருவாரூர்

எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி
    எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
    கொல்லுங்கூற் றொன்றை யுதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
    கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
    வீரட்டங் காதல் விமலா போற்றி. -4

- திருஅதிகை வீரட்டானம்

மூத்தவனாய் உலகுக்கு முந்தி னானே
    முறைமையால் எல்லாம் படைக்கின் றானே
ஏத்தவனாய் ஏழுலகு மாயி னானே
    இன்பனாய்த் துன்பங் களைகின் றானே
காத்தவனாய் எல்லாந்தான் காண்கின் றானே
    கடுவினையேன் தீவினையைக் கண்டு போகத்
தீர்த்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
    திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. -5

-திருச்சோற்றுத்துறை

வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று
    வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றெய்து கனலப் பேசிக்
    கடியதோர் விடையேறிக் காபா லியார்
சுண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பூசித்
    தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர்
    அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. - திருஆமாத்தூர் -6

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
    நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
    செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
    இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
    நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. -திருநல்லூர்-7

வடியேறு திரசூலந் தோன்றுந் தோன்றும்
    வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
    காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
    எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
    பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. -8
- திருப்பூவணம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
    செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
    உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
    கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
    ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. -9
- திருஆவடுதுறை

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
    மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
    ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
    ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி. -10
- திருக்கயிலாயம்

# தேவாரம் – ஏழாம் திருமுறை

(சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது)

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடீபெரு
 மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக்
 கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
 நல்லூர் அருட்டுறையுள்
அத்தாஉனக் காளாயினி
 அல்லேன்எனல் ஆமே. - திருவெண்ணெய்நல்லூர் -1

நத்தார்புடை ஞானம்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமழு வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே. -2
- திருக்கேதீச்சரம்

பொன்னார் மேனியனே
 புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
 மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே
 மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால்
 இனியாரை நினைக்கேனே. -3
-திருமழபாடி

நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் மரவும் உடையான் இடமாம்
வாரும் மருவி மணிபொன் கொழித்துச்
சேருந் நறையூர்ச் சித்தீச் சரமே. -4
- திருநறையூர்ச் சித்தீச்சரம்

நீள நினைந்தடியேன் உனை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித் தரப்பணியே - திருக்கோளிலி -5


வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின்தடங் கண்ணான்மல ரோனுங்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே. -6
- திருக்கேதாரம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. -பொது -7

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்னி னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. -8
- திருப்பாண்டிக்கொடுமுடி

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் காண மில்லைக்
கழல டிதொழு துய்யி னல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட வாடி
ஆழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்
குய்யு மாறொன் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியு ளீரே. -9
- திருவோணகாந்தன்தளி

நீள நினைந்தடியேன் உனை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித் தரப்பணியே. -10
- திருக்கோளிலி



# திருவாசகம்

(மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய எட்டாம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால்
மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழலோ. -திருச்சாழல் -1

ஆடு கின்றலை கூத்துஉடையான் கழற்(கு)
அன்பிலை என்புருகிப்
பாடு கின்றலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றலை தெருவுதோ றலறிலை
செய்வ தொன்ற றியேனே. — திருச்சதகம் -2

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். -3
-திருவெம்பாவை

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. - பிடித்த பத்து -4

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. - அருட்பத்து -5

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. - வாழாப்பத்து -6

புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. - அச்சப் பத்து -7

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. -8

- திருப்பள்ளியெழுச்சி

கீதம் இனிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில்
பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற்
சொல்லிறந் துநின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லான
அந்தமி லான்வரக் கூவாய். - குயிற்பத்து -9

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன்எனக் கருளியவாறு யார்பெறுவார் அச்சோவே! -10

- அச்சோப் பதிகம்



# திருவிசைப்பா

(ஒன்பதாம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
    உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
    சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
    அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
    தொண்டனேன் விளம்புமா விளம்பே. -1

- திருமாளிகைத் தேவர் - சிதம்பரம், தில்லை

செங்கணா போற்றி! திசைமுகா போற்றி!
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி! அமரனே போற்றி!
அமரர்கள் தலைவனே போற்றி!
தங்கள்நான் மறைநூல் சகலமும் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நா யகனே போற்றி! ஏழ் இருக்கை
இறைவனே! போற்றியே போற்றி! -2

- கருவூர்த் தேவர் - திருச்சாட்டியக்குடி

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
  கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கண்நா யகராய்ப் பவனிபோந்(து) இங்ஙன்
  முரிவதோர் முரிவுமை அளவும்
தக்கசீர்க் கங்கை அளவுமன்(று) என்னோ
  தம்மொருப் பாடுல கதன்மேல்
மிக்கசீர் ஆரூர் ஆதியாய் வீதி
  விடங்கராய் நடம்குலா வினரே. -3

-பூந்துருத்திநம்பி காடநம்பி - ஆரூர்

மின்னார் உருவம் மேல்வி ளங்க
வெண்கொடி மாளிகை சூழப்
பொன்னார் குன்றம் ஒன்று வந்து
நின்றது போலும் என்னாத்
தென்னா என்று வண்டு பாடும்
தென்தில்லை யம்பலத்துள்
என்னா ரமுதை எங்கள் கோவை
என்று கொல் எய்துவதே! -4
- கண்டராதித்தர் - சிதம்பரம், தில்லை

மண்ணோடு விண்ணளவும்
மனிதரொடு வானவர்க்கும்
கண்ணாவாய் கண்ணாகா(து)
ஒழிதலும்நான் மிகக்கலங்கி
அண்ணாவோ என்றண்ணாந்(து)
அலமந்து விளித்தாலும்
நண்ணாயால் திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே. -5
- வேணாட்டடிகள் - சிதம்பரம், தில்லை

வாரணி நறுமலர் வண்டு கெண்டு
பஞ்சமம் செண்பக மாலை மாலை
வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்துவந் திவைநம்மை மயக்கு மாலோ
சீரணி மணிதிகழ் மாட மோங்கு
தில்லையம் பலத்தெங்கள் செல்வன் வாரான்
ஆரெனை அருள்புரிந் தஞ்சல் என்பார்
ஆவியின் பரமன்றென்றன் ஆதரவே. -6
- புருடோத்தம நம்பி -சிதம்பரம், தில்லை

விம்மி விம்மியே வெய்துயிர்த் தாளெனா
உம்மை யேநினைந் தேத்தும் ஒன்றாகிலள்
செம்ம லோர்பயில் தில்லையு ளீர்எங்கள்
அம்மல் ஓதி அயர்வுறுமே. -7
- சேதிராயர் - சிதம்பரம், தில்லை

அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய்
ஆரா அமுதமாய்க்
கல்லால் நிழலாய் கயிலை மலையாய்
காண அருள் என்று
பல்லா யிரம்பேர் பதஞ்ச லிகள்
பரவ வெளிப்பட்டுச்
செல்வாய் மதிலின் தில்லைக்கு அருளித்
தேவன் ஆடுமே. -8

- திருவாலியமுதனார் - சிதம்பரம், தில்லை

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே. -9

- சேந்தனார் - திருவீழிமிழலை

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசைய. -10

- திருமளிகைத் தேவர் - சிதம்பரம், தில்லை

# திருப்பல்லாண்டு

(சேந்தனார் அருளிய ஒன்பதாம் திருமுறை)

நாடு: சோழநாடு      தலம்: சிதம்பரம், தில்லை

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
    வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
    புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன
    அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்
    பல்லாண்டு கூறுதுமே. -1

மிண்டு மனத்தவர் போமின்கள்
    மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
    ஆட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர்
    ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
    பல்லாண்டு கூறுதுமே. -2

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
    தூய்மனத் தொண்டர் உள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
    சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
    விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுர்கே
    பல்லாண்டு கூறுதுமே. -3

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
எங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதைஎன் ஆர்வத் தனத்தினை
அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. -4

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்(கு) ஆட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. -5

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. -6

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனக மும்அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. -7

குழலொலி யாழொலி கூத்தொலி
    ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
    விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
    யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே. -8

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
    அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
    இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
    திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
    பல்லாண்டு கூறுதுமே. -9

எந்தைஎன் தாய்சுற்றம் முற்றும் எமக்கமு
    தாம்எம் பிரான்என் றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
    அகுநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்(து)
    ஆண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேஎன்று
    பல்லாண்டு கூறுதுமே. -10



# பெரியபுராணம்

-திருத்தொண்டர் புராணம்-

(சேக்கிழார் அருளிய பன்னிரண்டாம் திருமுறை)

பெரியபுராணத்தின் இரண்டு காண்டங்களிலும் உள்ள மொத்தம் 13 சருக்கங்களிலும் இருந்து பாடல்கள் தரப்பட்டள்ளது.

திருச்சிற்றம்பலம்

**1-பாயிரம் -** திருமலைச் சருக்கம்

உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்:
அலகில் சோதியன்: அம்பலத்து ஆடுவான்:
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

**2- தில்லை வாழ் அந்தணர் சருக்கம்**
-தில்லை வாழ் அந்தணர் புராணம்

ஆதியாய் நடுவு மாகி
அளவிலா அளவும் ஆகிச்
சோதியா யுணர்வு மாகித்
தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப்
பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி. (1)

கற்பனை கடந்த சோதி
கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி
யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி (2)

**3.இலை மலிந்த சருக்கம் -** கண்ணப்பநாயனார் புராணம்

அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலைஇவ்வா
றறிநீயென் றருள்செய்வார்.

**4.மும்மையால் உலகாண்ட சருக்கம்**
- திருநாளைப்போவார் நாயனார் புராணம்

திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழுதார்:
பரிவரிய தொண்டர்களும் பணிந்துமனம் களிபயின்றார்:
அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாரம் மறைமுனிவர்.

**5. திருநின்ற சருக்கம் -** காரைக்காலம்மையார் புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போதுஉன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

**6- வம்பறா வரிவண்டுச் சருக்கம்**
- திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம்

சிவனடியே சிந்திக்குந்
திருப்பெருகு சிவஞானம்

பவமதனை யறமாற்றும்
பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாம்உணர்ந்தார் அந்நிலையில்.

**7- வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்**
-சிறுத்தொண்ட நாயனார் புராணம்

தூய திரு அமுது கனி கன்னல் அறுசுவைக் கறிநெய்
பாய தயிர் பால் இனிய பண்ணியம் உண் நீர் அமுதம்
மேய படியால் அமுது செய்விக்க இசைந்து அடியார்
மாயிரு ஞாலம் போற்ற வரும் இவர் பால் மனம் மகிழ்ந்தார்.

**8- பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்**
- ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம்

வையம்நிகழ் பல்லவர்தம்
குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலி யும்பகையும்
மிகையொழியும் வகையடக்கிச்
செய்யசடை யார்சைவத்
திருநெறியால் அரசளிப்பார்
ஐயடிகள் நீதியால்
அடிப்படுத்துஞ் செங்கோலார்.

**9- கறைக் கண்டன் சருக்கம்** - கணம்புல்ல நாயனார் புராணம்

தாவாத பெரும் செல்வம் தலை நின்ற பயன் இது என்று
ஓவாத ஒளிவிளக்குச் சிவன் கோயிலலுள் எரித்து
நா ஆரப் பரவுவார் நல்குரவு வந்து எய்தத்
தேவதி தேவர்பிரான் திருத்தில்லை சென்று அடைந்தார்.

**10- கடல் சூழ்ந்த சருக்கம்** -கோட்புலி நாயனார் புராணம்

அத்தனாய் அன்னையாய் ஆர் உயிராய் அமிர்தாகி
முத்தனாம் முதல்வன் தாள் அடைந்து கிளை முதல் தடிந்த
கொத்து அலர் தார்க் கோட்புலியார் அடிவணங்கிக் கூட்டத்தில்
பத்தராய் பணிவார் தம் பரிசினையாம் பகருவாம்.

**11- பத்தராய்ப் பணிவார் சருக்கம்**
- திருவாரூர்ப் பிறந்தார் புராணம்

அருவாகி உருவாகி
அனைத்துமாய் நின்றபிரான்
மருவாரும் குழலுமையாள்
மணவாளன் மகிழ்ந்தருளும்
திருவாரூர்ப் பிறந்தார்கள்
திருத்தொண்டு தெரிந்துணர
ஒருவாயால் சிறியேனால்
உரைக்கலாந் தகைமையதோ.

**12- மன்னிய சீர்ச் சருக்கம்**

திரிபுரம் எரித்தவாறும்
தேர்மிசை நின்றவாறும்
கரியினை உரித்தவாறும்
காமனைக் காய்ந்தவாறும்
அரிஅயற்கு அரியவாறும்
அடியவர்க்கு எளியவாறும்
பிரிவினர் பாடக் கேட்டுப்
பரமனார் அருளினாலே. (1)
- திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம்

சீர்வளர் சிறப்பின் மிக்க
செயல்முறை ஒழுக்கம் குன்றா
நார்வளர் சிந்தை வாய்மை
நன்மையார் மன்னி வாழும்
பார்வளர் புகழின் மிக்க

பழம்பதி மதிதோய் நெற்றிக்
கார்வளர் சிகர மாடக்
காம்பீலி என்ப தாகும். (2)
- நேச நாயனார் புராணம்

**13- வெள்ளானைச் சருக்கம்**

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று உளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

## வீடுகளில் பாராயணம் செய்தல்

காலையில் ஐந்து மணிக்கு முன்னர் துயிலெழுந்து நீராடி, திருநீற ணிந்து, பூசை அறையில் கிழக்கு அல்லது வடக்குத் திசை நோக்கி அமர வேண்டும்.

முதலில் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். பிறகு விநாயகப் பெருமானைத் துதிக்க வேண்டும். இதனை அடுத்து நால்வர் (திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர்) துதிப் பாடல்ளைப் பாடவேண்டும். அதன் பின்னரே, அவரவர்கள் விரும்பும் பதிகங்களை பக்தி சிரத்தையுடன் ஓதுதல் வேண்டும். நால்வர் எனப்படுபவர்கள் “சமயக்குரவர்” என்றும் அழைக்கப்படுவர்.

பதிகங்களைத் துவங்குவதற்கு முன்பாகவும் முடித்த பின்னரும் “திருச்சிற்றம்பலம்” என்று கூறுதல் வேண்டும்.



# திருப்புகழ்

(அருணகிரிநாதர் அருளியது)

திருச்சிற்றம்பலம்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் ... அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை ... கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய ... மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு ... பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய ... முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த ... அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை ... இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் ... பெருமாளே.. -1

- வயலூர்

அபகார நிந்தைபட் ... டுழலாதே
அறியாத வஞ்சரைக் ... குறியாதே
உபதேச மந்திரப் ... பொருளாலே
உனைநானி னைந்தருட் ... பெறுவேனோ
இபமாமு கன்தனக் ... கிளையோனே
இமவான்ம டந்தையுத் ... தமிபாலா
ஜெபமாலை தந்தசற் ... குருநாதா
திருவாவி னன்குடிப் ... ருமாளே. -2

- பழனி

வஞ்சத் துடனொரு நெஞ்சிற் பலநினை
    வஞ்சிக் கொடியிடை ... மடவாரும்
வந்திப் புதல்வரும் அந்திக் கிளைஞரு
    மண்டிக் கதறிடு ... வகைகூர
அஞ்சக் கலைபடு பஞ்சிப் புழுவுடல்
    அங்கிக் கிரையென ... வுடன்மேவ
அண்டிப் பயமுற வென்றிச் சமன்வரும்
    அன்றைக் கடியிணை ... தரவேணும்
கஞ்சப் பிரமனை அஞ்சத் துயர்செய்து
    கன்றச் சிறையிடு ... மயில்வீரா
கண்டொத் தனமொழி அண்டத் திருமயில்
    கண்டத் தழகிய ... திருமார்பா
செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
    செந்திற் பதிநக ... ருறைவோனே
செம்பொற் குலவட குன்றைக் கடலிடை
    சிந்தப் பொரவல ... பெருமாளே. - திருச்செந்தூர் -3

மாதர்வச மாயுற் ... றுழல்வாரும்
மாதவமெ ணாமற் ... றிரிவாரும்
தீதகல வோதிப் ... பணியாரும்
தீநரக மீதிற் ... றிகழ்வாரே
நாதவொளி யேநற் ... குணசீலா
நாரியிரு வோரைப் ... புணர்வேலா
சோதிசிவ ஞானக் ... குமரேசா
தோமில் கதிர்காமப் ... பெருமாளே. - கதிர்காமம் -4

நாடித் தேடித் ... தொழுவார்பால்
    நானத் தாகத் ... திரிவேனோ
மாடக் கூடற் ... பதிஞான
    வாழ்வைச் சேரத் ... தருவாயே
பாடற் காதற் ... புரிவோனே
    பாலைத் தேனொத் ... தருள்வோனே
ஆடற் றோகைக் ... கினியோனே
    ஆனைக் காவிற் ... பெருமாளே. - திருவானைக்கா -5

கயல்விழித் தேனெனைச் செயலழித் தாயெனக்
கணவகெட் டேனெனப் … பெறுமாது
கருதுபுத் ராஎனப் புதல்வரப் பாஎனக்
கதறிடப் பாடையிற் … றலைமீதே
பயில்குலத் தாரழுப் பழையநட் பாரழுப்
பறைகள்கொட் டாவரச் … சமனாரும்
கயல்விழித் தேனெனைச் செயலழித் தாயெனக்
கணவகெட் டேனெனப் … பெறுமாது
கருதுபுத் ராஎனப் புதல்வரப் பாஎனக்
கதறிடப் பாடையிற் … றலைமீதே
பயில்குலத் தாரழுப் பழையநட் பாரழுப்
பறைகள்கொட் டாவரச் … சமனாரும் -6
- திருவருணை

நிறைமதி முகமெனு … மொளியாலே
நெறிவிழி கணையெனு … நிகராலே
உறவுகொள் மடவர்க … ளுறவாமோ
உனதிரு வடிவியினி … யருள்வாயே
மறைபயி லரிதிரு … மருகோனே
மருவல ரசுரர்கள் … குலகாலா
குறமகள் தனைமண … மருள்வோனே
குருமலை மருவிய … பெருமாளே. -7
- சுவாமிமலை

காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் … தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் … திரியாதே
சீவ னொடுக்கம் பூத வொடுக்கம்
தேற வுதிக்கும் … பரஞான
தீப விளக்கங் காண எனக்குன்
சீதள பத்மந் … தருவாயே
பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் … தருவீரா

பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சுங் ... கதிர்வேலா
தூவிகள் நிற்குஞ் சாலி வளைக்குஞ்
சோலை சிறக்கும் ... புலியூரா
சூரர் மிகக்கொண் டாட நடிக்குந்
தோகை நடத்தும் ... பெருமாளே. -8
- சிதம்பரம்

ஈனமிகுத் துளபிறவி ... யணுகாதே
யானுமுனக் கடிமையென ... வகையாக
ஞானஅருட் டனையருளி ... வினைதீர
நாணமகற் றியகருணை ... புரிவாயே
தானதவத் தினின்மிகுதி ... பெறுவோனே
சாரதியுத் தமிதுணைவ ... முருகோனே
ஆனதிருப் பதிகமரு ...... ளிளையோனே
ஆறுதிருப் பதியில்வளர் ... பெருமாளே. -9
- ஆறு திருப்பதி

முட்டுப் பட்டுக் ... கதிதோறும்
முற்றச் சுற்றிப் ... பலநாளும்
தட்டுப் பட்டுச் ... சுழல்வேனைச்
சற்றுப் பற்றக் ... கருதாதோ
வட்டப் புட்பத் ... தலமீதே
வைக்கத் தக்கத் ... திருபாதா
கட்டத் தற்றத் ... தருள்வோனே
கச்சிச் சொக்கப் ... பெருமாளே. -10
- காஞ்சீபுரம்

திருச்சிற்றம்பலம்

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.
-கந்தபுராண வாழ்த்து

ஓம் நம பார்வதி பதயே
அரகர மகாதேவா
ஓம் நம பார்வதி பதயே
அரகர மகாதேவா
ஓம் நம பார்வதி பதயே
அரகர மகாதேவா

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!




பஞ்சபுராண திரட்டு
ஆக்கம்
ம.ஜெகநாதன் (ஜெக்கி)
திருநாவுக்கரசர்
மாணிக்கவாசகர்
சுந்தரர்
சம்பந்தர்
சேக்கிழார்